**செய்தி வெளியீடு எண்:663** **நாள் : 13.12.2015**

# செய்தி வெளியீடு

காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 16.10.2015 அன்று நம்ருதா (NAMRUTHA) என்ற வெள்ளைப் புலி ஈன்றெடுத்த இரண்டு ஆண் புலி குட்டிகள் மற்றும் இரண்டு பெண் புலி குட்டிகள் ஆகியவற்றுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (13.12.2015) பெயர் சூட்டினார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 16.10.2015 அன்று நம்ருதா என்ற வெள்ளைப் புலி இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் புலி குட்டிகளை ஈன்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நம்ருதா என்ற வெள்ளைப் புலி ஈன்றெடுத்த இரண்டு ஆண் புலி குட்டிகளுக்கு தேவா (DEVAA), நகுலா (NAKULAA) என்றும், இரண்டு பெண் புலி குட்டிகளுக்கு கலா (KALAA), மாலா (MAALAA) என்றும் பெயர் சூட்டினார்கள்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.

நாள்: 13.12.2015